செய்தி வெளியீடு எண்: 620 நாள் : 09.12.2014

# பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி 9.12.2014 அன்று மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு. B V ரமணா அவர்கள் தலைமையில், ஆவின் பால் கொள்முதல் விலை உயர்வை அடுத்து, பால் கொள்முதல் நாளொன்றுக்கு 20.70 இலட்சம் லிட்டரிலிருந்து 8.12.2014 அன்று 26.32 இலட்சம் லிட்டர் என்ற அளவில் உயர்ந்துள்ள நிலையில், பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனையை அதிகரிப்பது குறித்து ஆய்வு கூட்டம் சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்த ஆய்வு கூட்டத்திற்கு கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் அரசு செயலாளர், முனைவர் ச. விஜயகுமார், இ.ஆ.ப., மற்றும் பால்வளத்துறை ஆணையர் / மேலாண்மை இயக்குநர் திரு. சுனீல் பாலீவால், இ.அ.ப. ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி தற்பொழுது நாளொன்றுக்கு பால் கொள்முதல் கூடுதலாக 6.00 இலட்சம் லிட்டர் அதிகரித்துள்ளது. தற்போதைய பால் கொள்முதல் அளவான நாளொன்றுக்கு 26.32 இலட்சம் லிட்டர் என்ற அளவிலிருந்து 30 இலட்சம் லிட்டராக அதிகரித்து, தமிழகத்தில் இரண்டாம் வெண்மைப்புரட்சியை ஏற்படுத்தி புதிய சரித்திர சாதனை படைக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பால்பண்ணைகளின் மேம்பாட்டிற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கான நிதி ஆதாரத்தினை பெருக்குவது குறித்த கருத்துக்கள் ஆலோசிக்கப்பட்டது. மேலும், ஆவின் நிறுவனத்தை பொருளாதாரத்தில் மேம்படுத்துதல் மற்றும் பால் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தல் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

தற்பொழுது ஆவின் இணையம் சென்னையில் மாதவரம், அம்பத்துார் மற்றும் சோழிங்கநல்லூர் பால்பண்ணைகள் மூலம் நாளொன்றுக்கு 11.50 இலட்சம் லிட்டர் என்ற அளவில் பால் விற்பனை செய்து வருகிறது. ஆவின் பால் விற்பனையை விரைவில் நாளொன்றுக்கு கூடுதலாக 2 இலட்சம் லிட்டர் அதிகரித்து, சென்னை மாநகரில் நாளொன்றுக்கு 13.50 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்ய இலக்கு

நிர்ணயிக்கப்பட்டது. இதனடிப்படையில் மாதவரம், அம்பத்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் பால்பண்ணைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ஆலோசிக்கப்பட்டது. மேலும் மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் பால் விற்பனையை நாளொன்றுக்கு 1.50 இலட்சம் லிட்டர் அதிகரித்து 11.50 இலட்சம் லிட்டராக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பணம், குறித்த நேரத்தில் பட்டுவாடா செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

அம்பத்தூரில் புதிதாக நாளொன்றுக்கு 15 ஆயிரம் லிட்டர் ஐஸ்கிரீம் மற்றும் 1000 கிலோ பன்னீர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை சுமார் 21 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் வரும் ஜூன் 2015–ல் முடிவடையும் வகையில் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

தற்பொழுது அம்பத்தூரில் இயங்கி வரும் பால்பொருட்கள் பண்ணை அதிக அளவில் தயிர், மோர், லஸ்ஸி போன்ற பால்பொருட்கள் தயாரிக்கும் வகையில் உட்கட்டமைப்பு விரிவாக்கப்படும். புதிய பால்பொருட்கள் அறிமுகப்படுத்தவும் மற்றும் அதிக நாட்கள் கெடாமல் இருக்கும் வகையில் டின்களில் அடைக்கப்பட்ட குலோப்ஜாமூன், ரசகுல்லா போன்ற பால்பொருட்களும் உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் ஆவின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**